மாதர்மனோரஞ்சனி.

VOL. I. MADRAS, APRIL 1899. No. 2.
புத்த. I. சென்னப்பட்டணம்: 1899ஹு ஏப்ரல்மீ இல. உ.



சிற்சில விஷஜெந்துக்கள்.*

உலகத்தில் விஷஜெந்துக்களநேகம். அவைகள் பற்பலவாறு தீண்டுபவையும் விஷவீரியத்தில் ஏற்றம் குறைச்சலுள்ளன. "சாணுக்கோர்பாம்பும் முழத்துக்கோர்பேயு மெனப்" பழமொழியுளதல்லவா?

முதல் முதல் விஷமாவது என்ன? உட்கொண்டால் உயிரை வாங்குவது என்றுயாரும் எளிதில் சொல்லுவார்கள். சற்றேறக்குறைய இது தான் பெரியவைத்தியர்களுடைய கொள்கை. சிலவிஷங்கள் தேகஉபாதியை மாத்திரம் விளைவிக்கும். ஆனால் உட்கொள்வதெப்படி? வாயிலிட்டு விழுங்குவது என்பார்கள். சற்று யோசித்துப் பார்த்தால் மற்றொருவழி உட்கொள்வது விளங்கும். பாம்புகடித்து விஷமேறுவதும், தேள்கொட்டி நெறியேறுவதும் நமது உடம்பின் மேல்தோலைக்கிழித்து இரத்தத்தில் விஷத்தைச் செலுத்துவதின் பயனன்றோ? விஷம் இவ்வாறு இரத்தத்தில் கலந்தால் நமது உடலுக்குள் எவ்விடங்களிலும் பரவும். இவ்வாறு இரத்தத்தில் கலந்து தீங்கு விளைவிக்காமலிருக்கும் பொருட்டுத்தான் தேள்கொட்டிய மறுநொடியில் கொட்டுவாயினின்றும் இரத்தம் வரவொட்டாமல் கட்டுப் போடுகிறோம். கட்டவிழ்த்தால் இரத்தம் ஓடுவதுடன் நெறியேறுவதும் தெரியும். உட்கொள்வது இன்னும் ஓர்விதம்: நாசியின் மூலமாய் வாயுரூபமாய் சிலவிஷங்களைக் கிரகிக்கிறோம். நாம் மூச்சுவிடும்

* இது கிரிஸ்தியன்காலேஜ் ஜீவசாஸ்திரப் புலவரும் போதகருமான **டாக்டர் ஹெண்டேர்ஸன்** துரையவர்கள் சென்னை மாதர் சங்கத்தில் செய்த பிரஸங்கசாரம்.

போது வெளியே வருகிறவாயுவையே இடைவிடாமல் நாம் மறுபடி உள்வாங்கிக் கொண்டால் சற்றுநேரத்திலிறப்போம். இந்தவாயுநிலக் கரிச்சுரங்கங்களில் திடீரென்று தரையினின்று உண்டாகும். அதனால் அங்குவேலை செய்வோர் யமனுக்காளாவார்கள்.

இம்மூன்று வகையில் யாதொருவகையாலாவது விஷத்தை உட்கொண்டபின் அவ்விஷம் பற்பல விதமாக தீங்கை விளைவிப்பது மன்றி கடைசியில் சாவையும் உண்டுபண்ணுகிறது. சிலவிஷங்கள் உட்கொண்டவுடன் தீராத மயக்கத்தைக் கொடுக்கின்றன. சிலவாயின்வழி உட்கொண்டமாத்திரத்தில் விஷம்சென்றவழி யெல்லாம் புண்ணாக்கி தசைகளை யெல்லாம் தின்று இரத்தக்கழிச்சலாகி மரணமுண்டாக்குகின்றன. சில வாந்திபேதி இரத்தக்கழிச்சலை யுண்டாக்கி உயிரை வாங்குகின்றன. இன்னும் தேகத்தில் சென்றமாத்திரத்தில் சிலவை அங்கத்தை யெல்லாம் குறுக்கவலித்தும், சிலபைத்தியம் உண்டுபண்ணியும் உயிரைக் கொண்டுபோகும். சிலவிஷங்கள் மூளையைத்தாக்குகின்றன. சில இரத்தாசயத்தையாவது, சுவாசாசயத்தையாவது தாக்குகின்றன.

இவ்வாறு விஷங்கள் கெடுதியாயிருந்தாலும், அவைகளிலநேகம் நமது தேகத்துக்கு நன்மையும் விளைவிக்கின்றன. அளவுக்குமிகுந்தால் அமிர்தமும் நஞ்சன்றோ. ஆகையால் அளவுதவறி எதுவும் கொள்ளக் கூடாது. விஷபதார்த்தங்களை கெடுதிஉண்டாக்குவதற்கு எவ்வளவோ அவ்வளவில் மிகவும் குறைத்து வாங்கிக்கொண்டால் விஷமும் சுகத்தைக்கொடுக்கும். இதுவுமல்லாமல் முறையைமாற்றினாலும் சுகத்தைக்கொடுக்கும். உதாரணமாக, கஞ்சா அதிகமாகக்கொண்டால் மூளையைத்தாக்கி அதை வேலைசெய்யாமல் தடுத்து உயிரைவாங்கும். சிறுகக்கொண்டால் அதுவே உடல்நோவைத்தீர்க்கச் சிரேஷ்டமான மருந்து. நமதுவைத்தியர்கள் அநேகவித பாஷாணங்களை சுத்திசெய்தாவது அளவைக்குறைத்தாவது வியாதிகளுக்குக் கொடுக்கிறார்கள்.

விஷங்கள் உடலுக்குள்செல்லும் வழிகளெல்லாம் முக்கியமாக இரண்டு; ஆகாரம்செல்லும் வழியொன்று, இரத்தத்துடன்கலந்து செல்லுவது மற்றொன்று. முற்கூறியவழி செல்லுவதற்கு வாயின்வழியே உட்கொள்ளவேண்டும். பிற்கூறியவழி செல்லுவதற்கு இரத்தநாடிகளில் நேராகச்செலுத்தினும் செலுத்தலாம், அல்லது அவ்விரத்தநாடியின் பக்கத்தில் சேரும்படிசெய்தால் சிறுபொழுதில் இரத்தத்துடன் கலக்கும். விஷஜெந்துக்கள் பின்சொல்லியவழியே விசேஷமாக தங்களுடையவிஷத்தை நமது தேகத்துக்குள் செலுத்துகின்றன. அப்படி நமது மேல்தோலின் கீழ்வரையில் விஷத்தைச் செலுத்துவதற்கான

கருவி அநேக விஷஜெந்துக்களிடத்திலே இருக்கின்றது. இவ்வாறு செலுத்தியவிஷத்தை தேகத்தில் ஓடிக்கொண்டிருக்கும் இரத்தமானது அதிவேகமாய் கொண்டுபோய் அந்தவிஷம் எவ்விடத்தில் தீங்கு விளைவிக்குமோ அவ்விடத்தில் சேர்க்கின்றது. எந்தவிஷமானாலும் சற்றேறக்குறைய விஷம் புகுந்தவிடத்தில் நோவு உண்டாக்குவதே முதற் குறியாம்.

விஷஜெந்துக்கள் விஷத்தைச் செலுத்துவதற்கான கருவிகள் இயற்கையாகவே அவைகளிடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அக்கருவிகள் வெளிப்பார்வைக்கு எவ்வாறிருந்தாலும், எவ்விடத்திலிருந்தாலும் காரியாம்சத்தில் ஒரேவிதமாகத்தானிருக்கின்றன. எல்லாஜெந்துக்களிடத்திலும் விஷம் சேரும்பை ஒன்றுண்டு. இது ஒவ்வொரு ஜெந்துவும் எதைக்கொண்டு தீண்டுகிறதோ அதற்குச்சற்றே அடியிலிருக்கும். இதினின்றும் மயிர்க்கால்போல நுண்ணிய குழலொன்று தீண்டும்கருவி நுனிவரைச்செல்லும். தீண்டும்கருவியோமிகக்கூர்மையானது. நமது சதைக்குள் இலகுவாய்ச்செல்லும். விஷப்பை, குழல், தீண்டும் கருவிஆகிய இவைகளெல்லாம் சேர்ந்து பீச்சுங்குழலையொக்கும். விஷஜெந்துக்கள் தீண்டும்போது பல்லேயோ கொடுக்கையோ நமதுதோலுக்குள் செலுத்தவே விஷப்பையானது நாற்புறமும் அழுத்தப்பெற்று விஷத்தைக் குழலின்மூலமாய் ஏற்றுகின்றது.

இச்சென்னையிலும் சுற்றிலுமுள்ள விஷஜெந்துக்களாவன. நொங்குமீன் (Jelly fish) இதுகண்ணுக்குத்தெரியாதபடி இலகுவாய்தீண்டும், இது ஜலத்திலேயே வசிக்கும். தேனீ, கொசுகு, தேள், பூரான், சிலந்திப்பூச்சி முதலிய ஜலமண்டலி ஜாதிகள், விஷப்பாம்புகளாகிய நாகம், கட்டுவிரியன், வெழலை, செவ்வியன், கண்கொத்தி, பச்சைப் பாம்பு, கொம்பேறிமூக்கன், சாரை, கூழைப்பாம்பு, முதலானவைகள். இவைகளிலநேகம் யாருக்கும்தெரியும். தேள் கொடுக்கால்கொட்டும், பாம்பும் மற்றவையும் கடிக்கும். இவைகளெல்லாம் தீண்டியவிடத்தில் காயமுண்டுபண்ணி அதிகநோவை விளைவிக்கும். ஆயினும் சிற்சிலபாம்புகளொழிய மற்றவைகள் தீண்டினால் பலஹீனமானவர்கள், குழந்தைகள்நீங்க மற்றவர்களுக்கு உயிர்ப்பயமில்லை.

மகாராணியின் இளம்பருவத்தைப்பற்றிய கதைகள்.

3. **செய்நன்றிமறவாமை:**—நமது மகாராணியார் தன்தாயாருடன் சவாரிசெய்துபோகையில் வழியில் குதிரைகள் அடங்காமல்மனம்போனபடி இழுத்துக்கொண்டுபோயின. மார்க்கத்திற்கு ஒருபுறம் மலையும்

மறுபுறம் கட்டுமாகையால் உயிருக்கே அபாயம் வரும்படியாயிருந்தது. அப்பொழுது அந்த மார்க்கத்தில் சென்று கொண்டிருந்த ஒரு கிரஹஸ்தன் ஓடின குதிரைகளை பலமாகப்பிடித்து நிறுத்தி மகாராணியாரையும், அவர்கள் தாயாரையும் அபாயத்தினின்றும் தப்புவித்தான். இந்த உபகாரத்தை நமது மகாராணியார் மனதில் வைத்திருந்து தான் பட்டத்துக்கு வந்தவுடன் அவனை உயர்ந்தஸ்திதிக்குக் கொண்டு வந்தனர்.

4. அடக்கம்:—ஒரு நாள் மகாராணியார் தனது உபாத்தியாயர் எழுந்துபோனபின் தனது சரித்திரப்புத்தகத்தில் வைக்கப்பட்டிருந்த தனது வம்சாவளியைப் பார்த்து ஆச்சரியத்துடன் 'இதென்ன புதுமை; இதைநான் பார்த்ததே இல்லையே' என்றாள். 'நீர்பார்ப்பது அவசியமென்று ஒருவருக்கும் தோற்றவில்லை' என **லேஜென்** சொன்னாள். 'ஆ! அப்படியா! எனக்கு சிம்மாசனம் வெகு சமீபம் போலத் தோற்றுகிறதே; இப்படியிருக்குமென்று நானறியேனே' என 'ஆம், சமீபந்தான்' என உபாத்திச்சி சொல்லவே சற்று பொறுத்து 'சரி' சிம்மாசனமேறுவோமென்று அநேக குழந்தைகள் பெருமைபாராட்டிக்கொள்ளும். கீர்த்தியுண்டு ஆனால் பொறுப்பாகிய பாரத்தையார் சுமப்பார்கள்? இந்தபாரம் கீர்த்தியினுமதிகமன்றோ?" என்று பயபக்தியுடன் தான்நல்லவளாக இருப்பதாக வாக்களித்தாள்.

சாவித்திரி சரித்திரம்.

இம்மாதிரியாக நாரதமுனிவர் சென்றபிறகு **அசுவபதி** மன்னனும் மனத்துயரமாறாதவனாய் தன்மகளைநோக்கி புத்திசொல்லத்தொடங்கினான்:—"அம்மா கண்மணியே, நாரதமகாமுனி சொன்னதைக்கேட்டாயோ. இப்படிப்பட்ட அற்பாயுளையுடைய இராஜகுமாரனை கணவனாகக்கொள்வது தகுதியோ? உலகத்தில் மக்களைப்பெற்ற மாதாபிதாக்கள் தங்கள்குழந்தைகளுக்கு விவாகஞ்செய்ய ஆரம்பிக்கும் முன்னதாக ஜோதிடர்களையழைத்து கல்லியாணமாகப்போகிற பெண்ணுக்கும் பிள்ளைக்கும் வயதுதீர்க்கமா யிருக்கிறதாவென்று பார்த்துத் தெளிந்தபிறகு கல்லியாணத்துக்கு யத்தினம் பண்ணுகிறது வழக்கமல்லவோ? அவ்வழக்கத்திற்கு விரோதமாய் நான் மாப்பிள்ளையின் வயதைப்பற்றி முன்னதாக ஆராய்ந்துபாராமலிருந்தாலுமே உலகத்தார் என்னை தூஷிப்பார்களே. அப்படியிருக்க மாப்பிள்ளை அல்பாயுளுடையவனென்று தெரிந்தும் அவனுக்கு உன்னை மணஞ்செய்வித்தால் உலகத்தார் என்னைக்கண்டு நகைக்கமாட்டார்களா? இப்படி உல

கெல்லாம் நகைக்கும்படியான காரியத்தில் நான் ஏற்படவேணு மென்று உனக்கெண்ணமிருக்கிறதா? ஆகையால், என்கண்ணே! நீ, 'பெரியோர்களுடைய வாக்கியத்தைத் தள்ளலாகாது' என்கிற சாஸ்திரப்படி என்பேச்சைத்தட்டாமல், இந்தஅற்பாயுளையுடைய இராஜகுமாரனைத்தள்ளி வேறொருகணவனை மனதில்சிந்தித்து மணஞ்செய்துகொள்வது நலமாயிருக்கும். "யோஜிக்காமல் செய்தகாரியத்தின் பயன் சாகும்வரையில் துன்பத்தைத்தரும்" என்கிற பெரியோர்களுடைய வாக்கியத்தைக் கவனித்துக் காரியத்தைச்செய். நான்சொன்னேன் சொன்னேன். பிறகுவாக்கூடியதை நீதான் அனுபவிக்கவேண்டும்" என்று பலவாறாய் புத்தியுரைத்தான். சாவித்திரியோ இதற்கெல்லாம் இணங்காமல், முகங்கருகி "நான்வரித்தமகாபுருஷனுக்கு ஆயுள்பாக்கிய மில்லாமலிருந்தாலும், அவன் தாய்தந்தைகள் முதிர்ந்த வயதுடையவராயினும், கண்ணில்லாத குருடர்களாயினும், நாடிழந்து காட்டில் வசிப்பவர்களாயினும் அந்தஇராஜகுமாரனை விட்டு மற்றொருவனை மணம்புரிய நான் மனங்கொள்ளமாட்டேன். பாருங்கள், பாருங்கள் உலகத்தில்பேதையான பெண்களுக்கு ஒருபெரிய அபவாதம் வந்திருக்கிறது. அது நியாயமோ அநியாயமோ வென்பது யோஜித்துப்பார்த்தால் விளங்கும். ஸ்திரீகளுக்கு மன உறுதி இல்லை என்று அநேகர்சொல்லுகிறார்கள். 'ஒரு மனிதனுடைய பாக்கியத்தை அறிந்தாலும் அறியலாம் ஸ்திரீகளுடையசித்தத்தை யறியலாகாது' என்று பண்டிதர்கள் சொல்லியிருக்கிறார்கள். இம்மாதிரியான அபவாதத்துக்குக் காரணம் இன்னதென்று தங்களுக்கேவிளங்கும். ஆனாலும் நான்சொல்லுகிறேன். கொஞ்சம் செவிகொடுத்துக்கேளுங்கள். சிருஷ்டிகர்த்தனாகிய பிரம்மதேவன் சிருஷ்டிக்கிற வஸ்துக்களெல்லாம் ஒருமாதிரியல்லாமல் வேறுபட்டிருக்கின்றன. ஆகையால், ஸ்திரீகளும் வேறுபட்டிருக்கிறார்கள். அம்மாதிரியாகவே அந்த ஸ்திரீகளுடைய குணங்களும் பேதப்பட்டிருக்கின்றன. சிலபெண்கள் மன உறுதியில்லாமல் காரியங்களைச் செய்கிறார்கள் என்பது உண்மையே. அதினால்தான் ஸ்திரீஜாதிக்கெல்லாம் மனஉறுதி இல்லையென்கிற அபவாதம் உண்டாயிருக்கிறது. 'ஒருவன் பாவம்செய்தால் அதின்பயனை அனுபவிப்பவர் அநேகர்' என்கிறசாஸ்திரம் பொய்போகுமா? இம்மாதிரி அநியாயமான அபவாதத்தை நானும் என்னினத்தாருக்கு வரும்படிசெய்ய முயல்வதுநியாயமா? மேலும், யோஜித்துப்பாருங்கள். விவாஹமென்கிற சடங்கு அக்கினிசாக்ஷியாய் பாணிக்கிரஹணம் ஆனபிறகு தான் முடிவுபெற்றதாக உலகத்தில் சொல்வதுவழக்கம். சாஸ்திரத்தைசோதித்துப்பார்த்தால், பெண்ணும் பிள்ளையும் ஒருவருக்கொருவர்கண்டு இச்சைகொண்டதக்ஷணமே அந்தச்சடங்கு நிறைவேறினதாகத் தெரிய

வருகிறது. அக்கினிசாக்ஷியாய் பெண்ணின்கையை பிள்ளைபிடித்துக் கொள்வதோவென்றால் முன்னமே நிறைவேறின சடங்கை பகிரங்கப் படுத்துவதற்காகவென்று விளங்குகிறது. இப்படி சாஸ்திரமிருக்கும் பொழுது, சத்தியவானைக்கண்டு இச்சையடைந்தபிறகு அவனைவிட்டு மற்றொருவனை விவாகஞ் செய்துகொண்டால் எனக்குப் பாவம்நேரி டாதா? வைதவியத்தை யனுபவிக்கும்படி எனக்கு பிரம்மன்விதித் திருந்தால், நான் அந்தக்கட்டளையை எப்படிமீறமுடியும். ஆகையால் தாங்கள் எனக்கு உபதேசம்பண்ணுவதில் பயனில்லை" என்று மறுத்து உறுதியாய்ச்சொன்னாள். அதுகேட்ட அசுவபதியும், 'மலை அசைந்தாலும் நெருப்புநீராயினும், நீர்நெருப்பாயினும், கிழக்குத்திசையில் உதிக்கும் சூரியன மேற்றிசையிலுதித்தாலும், அண்டம்புரண்டாலும், மகத்துக்கள்வாக்கில் பொய்பிறவாது' என்று பெரியோர்கள் சொல்லக்கேட்டிருக்கிறோம். நாரதமுனிவரும், அந்தசத்தியவானுக்கு தீர்க்காயுசு உண்டானாலுமுண்டாகும் என்று சொல்லிப்போயிருக்கிறார். அவர்வார்த்தை பொய்போகாது. ஆகையால் மகள் மனம்கோணாமல் அந்தசத்தியவானுக்கே அவளை மணஞ்செய்துகொடுத்துவிடுவோம்" என்று தீர்மானம்செய்து துக்கம் நீங்கித் தேருதலடைந்தான்.

என். சாமிநாதசாஸ்திரியார்.

(இன்னும் வரும்.)

எரிமலை. பூகம்பம்.

பெண்மணிகளே!

நாம் புகையிருக்குமிடத்தில் நெருப்பிருக்கவேண்டுமென்று அறிவோமல்லவா? ஒருமலையிலிருந்து புகைகிளம்பக் கண்டோமானால்,

அவசியமாய் அம்மலையில் நெருப்பிருக்கவேண்டுமென்று ஊகிக்கிறோம். நம்முடைய ஊகம் சரியானதோ, அன்றி தப்பானதோ என்பதை அறிதற்கு அம்மலையினிடஞ்சென்று கண்ணால் பார்த்தால் அல்லது தெரியாது. நேரேபோய் பார்த்து நெருப்பிருப்பதாக நிச்சயித்தபிறகு, அவ்விடத்தில் நெருப்புண்டானதற்குக் காரணத்தையறிய நாம் விரும்புவது இயற்கையன்றோ? ஆதலால் மலையில் நெருப்பிருப்பதையும், அது அவ்விடத்தில் எவ்வாறாக வந்ததென்பதையும் சற்று கவனித்துப்பார்ப்போம்.

நெருப்பை யுண்டாக்கிக்கொண்டிருக்கும் மலைகளுக்கு **எரிமலைகளென்று**பெயர் இத்தென்னிந்தியாவில் எரிமலைகளே யில்லையாயினும், வெகுகாலமாக இடையிடையே பூகம்பமுண்டாவதனால் வட இந்தியாவிலுள்ள சிலமலைகளாவது எரிமலைகளாயிருந்திருக்கலாமென்று நினைத்தற்கிடமிருக்கிறது. அதுநிற்க மிகப்பெரிய எரிமலைகள் ஜப்பான், ஜாவா, ஸிஸிலி முதலியவிடங்களிலிருக்கின்றன. இம்மலைகள் சிற்சிலசமயங்களில் புகையையும், நீராவியையும் மண்முதலிய தூள்களையும் அதிகவிசையுடன் வெளியேதள்ளும். இவைகளுடன் கூட கற்கள்உருகி நீர்போலவடியும்; இப்படி யுண்டாகும்போது பக்கத்திலுள்ள தரையெல்லாம் அதிர்ச்சியடையும்.

மேற்கூறிய குணங்களையெல்லாம் பார்த்தால் நம்முடையமனதிற்குப் பலபலஎண்ணங்களெல்லாம் தோன்றுகின்றன. மனிதர் உடம்பில் பருத்தகட்டியொன்றுண்டானால் அவ்விடத்தில் மிகவருத்தத்தையுண்டாக்கிப் பிறகு,உடைந்துசீழ்இரத்தமுதலானவை வடியும்;அதுபோல இம்மலைகள் நம்மழகியநிலமாதின் உடம்பில் முளைத்தகட்டிகள்போலிருத்தலால் இவையினின்றுவரும் உருக்குக்கல், புகை, ஆவிமுதலியன சீழிரத்தங்களாகவும், இவையடுத்த பூமி அதிர்தலானது புண்ணுள்ள விடம் துடித்தலாகவும், கவிவாணர்கள் வருணிக்க இலக்காயிருக்கிறது. இவையன்றி கற்றறியாமாந்தர் தெய்வக்குறையால் உண்டாகும் துன்பங்களென்று வருத்தமுற இத்தோற்றங்கள் பயத்தைவிளைக்கின்றன. இத்துன்பங்களை தம்மிடமிருந்து நீக்குவதற்கு அத்தெய்வங்களுக்கு பூஜை பலிகளிட்டுச் சாந்திசெய்யமுயலுகிறார்கள். முன்காலத்தில் நம்முன்னோரைப்போலவே இக்காலத்திலும் நம்மிற்சிலர், பூகம்பமானது பூமியைத்தாங்கும் ஆதிசேஷன் பூபாரத்தைத் தனது ஒருதலையிலிருந்து மற்றொருதலைக்கு மாற்றுவதனால் உண்டாகும் அதிர்ச்சியென்று எண்ணுகிறார்கள். இம்மாதிரி பலவாறாக மதியூகிகளல்லாதவர்கட்குத் தோன்றுவதியற்கையே. ஆழ்ந்து யோசித்தமாத்திரத்தில் இவைகளின்காரணம் விசிதமாய் விளங்குமென்பதற்குஐயமில்லை.

வெகுகாலங்களுக்குமுன் நம்பூவுலகும், சூரியசந்திராதிகோளங்களும், மெல்லியதுகளாயிருந்த பதார்த்தத்தின் விகாரத்தால் பெருங்கோளங்களாகத்திரண்டு, மிக்கசூட்டினையுடையனவாய்ப் பம்பரம்போல் சுற்றிக்கொண்டிருந்தன. இவைகளில் முதற்றோன்றியது சூரியனென வெகுகாரணங்களைக்கொண்டு, ஐரோப்பியசாஸ்திரிகள் ஊகிக்கிறார்கள். இச்சூரியன் அதிவேகமாய் தன்னையேசுற்றிக்கொள்ளுவதனால், அதிலிருந்துபெயர்ந்து வெளிக்கிளம்பின ஒருபாகம் நாம் குடியிருக்கும்பூமி. நமது பூகோளத்தைப்போல பலகோளங்கள் சூரியனினின்றும் உண்டாயிருக்கின்றன. இவையெல்லாம் சூரியனுடம்பிலிருந்து பிறந்ததினால், இவையும் அதைப்போல மிகச்சூடாயிருக்கவேண்டுமல்லவா? ஆனால் நம்பூமியப்படியில்லையேயெனில் அதுதவறாகும். ஏனென்றால், சூடு வெகுகாலமாய் சிறுகச்சிறுகக் கழிந்துகொண்டிருக்குமானால் எதுவும் குளிர்ந்துபோம். அக்காரணத்தால் பூமியின்மேற்பாகங் குளிர்ந்திருக்கிறது. அதின் உள்ளெல்லாம்இன்னும் அதிஉக்கிரமா யிருக்கின்றதென்பதற்குக் குறியாய் எரிமலைகள் தம்முள்ளிருந்து நெருப்பைக்கக்குகின்றன. பூமியினுள்ளே பொதிந்துகிடக்கும் சூட்டினால் உள்ளிருக்கும்பதார்த்தங்கள் உருகி நீராய்க்கிடக்கவேண்டும். ஆனால் குளிர்ந்தமேல்பாகத்தின் பளுவால் அழுத்தப்பட்டிருப்பதனால் உருக இடமில்லாமல் கிடக்கின்றன. இப்படியிருக்க பூமியில்குளிர்ந்துள்ள மேற்பக்கத்தில் எவ்விடத்திலாவது, எக்காரணத்தினாலாவது பலவீனப்பட்டால் உடனே அவ்விடத்திலுள்கிடக்கும் பதார்த்தங்கள்மட்டும் உருகி அவ்விடத்தைக் கிழித்துக்கொண்டு கிளம்பி, மண்கல்முதலியவற்றை மேலேதள்ளிக்கொண்டுவரும். அப்படிவரும்போது பக்கத்திலுள்ளபூமிநடுங்கும். மேற்கூறியவாறு நிகழும்போதுதான் எரிமலைகளினின்று நெருப்புண்டாகிறது. அவையடுத்தபூமி நடுங்குவதுமாய்க் காணுகிறோம். ஆதலால் எரிமலையில் நெருப்புண்டாவதற்கும், அவற்றின் பக்கத்திலுள்ள பூகம்பத்திற்கும் காரணம், பூமியினுள்ளிருக்கும் அதிஉஷ்ணமே காரணமென்பது விசிதமாய் விளங்குகிறது.

தீ. ஏ. ஜீ. எஸ்.

சுகாதாரம்.

காற்று.

இதற்கு உருவம் நிறம் இல்லாமையால் கண்ணுக்குத்தோற்றாது. காற்றுக்கு இயல்பாய் மணம்இல்லாததினால் வாசனையால் தெரிந்து

கொள்ளக்கூடாது. ஆனால் அதை உணரவேண்டுமானால் ஸ்பரிசத்தால் தெரிந்துகொள்ளலாம்.

காற்றை சிலசாமர்த்தியமுள்ள ரஸாயனசாஸ்திரிகள் பரீக்ஷித்துப் பார்த்து இது **ஆக்ஸிஜன்** அல்லது பிராணவாயுவும் **நைட்ரோஜன்** என்னும் வாயுவும்சேர்ந்து கலப்புஎன்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இவைகளில் பிராணவாயுஒருபங்கும் மற்றொருவாயு நான்குபங்கும் சேர்ந்திருக்கிறது. இத்துடன் **கார்பானிக் ஆஸிட்காஸ்** என்னும் கரிஅமிலவாயுவும், நீர்ஆவியும், (ஜலவாயு or Watery Vapour) கொஞ்சம் கலந்திருக்கின்றன. இவ்விரண்டில் கரிவாயுவானது சுத்தமானகாற்றில் பதினாயிரம் பங்கில் இரண்டு அல்லது ஐந்துபங்குதான் இருக்கும். நீர்ஆவி, சமுத்திரம், ஏரி அல்லது குளங்களுக்கு அருகாமையிலுள்ள இடங்களில் மிகுதியாயிருக்கும். மற்றஇடங்களில் குறைவாயிருக்கும்.

காற்றில் மேற்கண்டபிராணவாயு, நைட்ரோஜன் வாயு, கரிஅமில வாயு, நீர்ஆவி அல்லது ஜலவாயுஎன்னும் நான்குஅம்சங்கள்தவிர இன்னும் சிலஇருக்கின்றன. ஆனால் அவைகளைப்பற்றி விவரித்து எழுதுவது அவசியமன்று.

இந்தநான்குவாயுகளில் **ஆக்ஸிஜன்** என்னும் பிராணவாயு எல்லா பிராணிகளுக்கும் அவசியமாய்வேண்டியது. இந்தபிராணவாயு இல்லாதஇடத்தில் ஒருபிராணியும் ஜீவித்திராது - நெருப்புமூட்டினாலும் எரியாது. பிராணவாயுமிகவும் தீட்சண்ணியம் பொருந்தியதாயிருப்பதால் அது தனித்திருக்குமாகில் அத்துடன் சம்பந்தப்படும் எல்லா வஸ்துக்களும் தகித்துப்போம். இதுஒன்றே பூமியைச்சுற்றிலும் வியாபித்திருக்குமாகில் ஜீவராசிகள் அதின்வேகத்தை தாங்கமுடியாமல் இறந்துபோம். நெருப்புமூட்டினால் குபீலென்று எங்கும்பரவிப்போகும். ஆகையால் சர்வேஸ்வரன் அதிகஜீவகாருண்யம் பொருந்தினவரானபடியால் நாம் உட்கொள்ளவேண்டிய பிராணவாயுவால் நமக்கு ஒருதீங்கும் நேரிடாமலிருக்கும்பொருட்டு ஒருபங்கு பிராணவாயுடன் நான்குபங்கு **நைட்ரோஜன்** வாயுவைச் சேர்த்துவைத்திருக்கிறார்.

நைட்ரோஜன் என்னும் வாயு ஒருகெடுதலும் செய்யக்கூடியதல்ல. ஆனால் அதுபிராணனுக்கு ஆதாரமானதுமல்ல. வெந்நீரை குளிர்ந்த ஜலத்தினால் விளாவுவதுபோல் மேற்கண்டபடி பிராணவாயுடன் நைட்ரோஜன் வாயுகலந்து அதின்தீட்சண்ணியத்தை அடக்கிவைத்திருப்பதைவிட வேறொரு பிரயோஜனமுமில்லை. இந்தவாயு தனித்திருந்தால் அப்பேர்ப்பட்ட இடத்தில் ஒரு பிராணியும் ஜீவித்திராது. நெருப்பும் எரியாது.

கார்பானிக் ஆஸிட்காஸ் என்னும் கரிஅமிலவாயுவானது மேற்சொல்லியபடி பதினாயிரத்தில் இரண்டு அல்லது ஐந்துபங்குஇருந்தால் ஒரு

கெடுதலையும் செய்யாது. இந்தஅளவிற்கு அதிகப்பட்டால் அதாவது நூறுபங்கில் ஒன்றரைபங்கு இருந்தாலும் அதிகமானாலும், தலைவலி முதலானநோய்களும் சிலசமயங்களில் மரணமும் நேரிடச்செய்யும்.

மலைநாட்டுப்பிரதேசங்களில் தவிர மற்றஇடங்களில் காற்று சுத்தமாயிருப்பது அரிது. காற்று அசுத்தப்படுகிறதற்கு அநேகவிதகாரணங்கள் உண்டு. அவைகளில் முக்கியமானவைகளில் சிலவற்றை குறித்துகாட்டுவோம்.

(1) ஜீவராசிகள் விடும்சுவாசத்தாலும் (மூச்சுவிடுதல்) கட்டை முட்டைகளை எரிப்பதினாலும், சுண்ணாம்பு காளவாய்களிலிருந்தும் கரி அமிலவாயு முதலானவைகள் உண்டாகின்றன.

(2) அழுகிக்கொண்டிருக்கும் எல்லாவித பதார்த்தங்களிலிருந்து துர்க்கந்தம் உண்டாகின்றது.

(3) பூமியிலிருந்து பலவித ஆவிகள் வெளிப்படுகின்றன.

(4) பலவிததொழில்கள் நடக்கும் இடங்களிலிருந்தும் மனிதர்கள் நடமாடும் பாதைகளிலிருந்தும் தும்பு தூசிகள் உண்டாகின்றன.

(5) ஜீவராசிகளின் தேகத்திலிருந்து பலவிதஅசுத்தமான பதார்த்தங்கள் வருகின்றன.

(6) நோயாளிகளிருக்குமிடங்களில் அந்தந்த ரோகத்தில் சம்பந்தமான சில அசுத்தமான அம்சங்களும் தொத்து வியாதிகளின் அணுக்கள் வெளியேறிவருகின்றன.

காற்று அசுத்தப்படுவதற்கு இத்தனைகாரணங்களிருக்கிறபோது உலகத்திலுள்ளகாற்று சீக்கிரத்தில் அசுத்தப்பட்டு போகுமேயென்று நீங்கள் நினைக்கலாம்.

ஆனால் அப்படிநேராது. ஏனெனில் மேற்கண்டபடி காற்றில் உண்டாகும் அசுத்தங்களை விலக்கும்படியாக சர்வரக்ஷகராகிய, கடவுளால் சிலஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன.

தெய்வீகமாய் காற்றைசுத்தப்படுத்த ஏற்பாடுகள்இருந்தால் நமக்கு பழிவிட்டதென்று நாம் இருக்கக்கூடாது. நாமும் இருக்கவேண்டிய ஜாக்கிரதையுடனிருந்து தெய்வீகமாய் ஏற்பட்டிருக்கும் வழிகளைத் தெரிந்துகொள்ளுவதுமன்றி அவைகளுக்கு அநுகுணமாய் நாம் செய்யக்கூடியது இன்னது இன்னது என்று தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம்.

(இன்னும் வரும்.)

டாக்டர். ஜெ. வி. இராமசுவாமிநாயுடு, எல். எம். & எஸ்.

மரகதவல்லி சுந்தரவல்லி இவர்கள் சரித்திரம்.

விருத்தம். இராகம் - தோடி.

நீராய் நிலனாய் நெருப்பாய் வளிவானா
யோராரிரு சுடரா யாவியா யாவைக்கும்
வேராகி வித்தாய் விளைவாகி யெல்லாமாம்
பேராளா வெங்கள் பிரானே யடிபோற்றி.

வடக்கே வெகுதூரத்தில் நீர்வளம் நிலவளம் முதலிய பல்வளங்களும் நிறைந்துள்ள தருமவிஹாரம் என்ற தேசத்தில் மெய்ஞ்ஞானபுரம் என்று சாதுக்களால் புகழப்படும் நகரமொன்றுளது. அந்நகரமானது கிழ்மேற்காக இருநூற்றைம்பதுமையில் விஸ்தீரணமும் தென்வடக்காக எண்பத்தேழுமைல் அகலமுமுள்ளது. இதன்றியும் அதன் மத்தியில் புண்ணியமலையென்று பேர்வாய்த்த ஒருபெரிய பர்வதமும் அப்பர்வதத்தினின் றிழிந்து வடமேற்காகச் செல்லும் பாகீரதியென்றொரு நதியும் அந்நதியினின்று பிரிந்தோடும் சிற்றாறாகிய குமுதவதியென்னும் பிரபல தீர்த்தமுமுள்ளன. மேற்சொல்லப்பட்ட புண்ணியமலையினடிவாரத்தில் கோபுரங்களமைந்த ஒரு மாளிகையும் அம்மாளிகையின் பின்புறத்தில் நிழலமர்ந்த ஒரு சிங்காரத்தோட்டமும் அச்சிங்காரத்தோட்டத்தின் மத்தியில் ஒரு நடபாவியும் அதற்கருகே கட்டிற்போலலங்கரித்த ஒரு மேடையும் இருக்கின்றன. அந்த நடபாவிக்கு மேற்புறத்தில் கீதங்கள்பாடும் பறவைகளும் அன்னங்களும் மயில்களும் அதிக உல்லாசமாகி யோடிவிளையாடுவதற்காக அமைத்த சிறந்த பொன்னிறமாகிய மாமரத்தாற் செய்யப்பட்ட பெருங்கூண்டுகளும் நெருங்கியுள்ளன.

இவ்வித வனப்புவாய்த்த சிங்கார மாளிகையின்கண் பனி ஏராளமாகப் பெய்யும் மார்கழி மாதத்தின் ஓர் தினத்தினிரவில் வீரர்களைப்போல வேடந்தரித்த இரண்டு சிறுவர்கள் தங்கள் குதிரைகளினின்றிழிந்து அத்திருமாளிகையின் முன்புறத்திலமர்த்திய ஒரு சிறு திண்ணையின்மீதுட்கார்ந்தார்கள். அவர்களுக்குள் நடந்த சம்பாஷணையாவது.

“நாமிப்போது புறப்பட்டு சுமார் ஆறுமணிநேரமாய் குதிரைகளின்மேற் சவாரிசெய்து அதிக இளைப்புடன் இவ்விடம் வந்திருக்கின்றோம். மணியோ ஏறக்குறைய பன்னிரண்டு மணியாய்விட்டது. ஜனசந்தடியும் அடங்கிவிட்டது. நமக்கு எவ்விதமாகப் பசியாறுவதோ எனக்கொன்றுந் தோற்றவில்லை” என்று மூத்தோன்சொல்ல,

அதற்கு மாறுத்தரவாக இளையோன், "ஆம் நீ சொலவது சரியே. நாம் இருவரும் நமது பேர்களையும் ஊர்களையும் மறைத்து ஒருவருக்குந் தெரியாமல் இந்த அர்த்தராத்திரியில் புதியஇடத்தில் வந்து சேர்ந்தோம். எனக்குப்பசியோ அதிக தொந்திரவைத் தருகின்றது, நாம் கொண்டுவந்த மூட்டையில் ஏதாவது தின்பண்டங்கள் மிகுந்திருக்கின்றனவா எடு பார்ப்போ"மென்றுரைக்க அவ்வசனத்தைக்கேட்ட மூத்தோன் மூட்டையை அவிழ்த்துப் பார்க்கையில் வழியிற்றின்று மிகுந்திருந்த உதிர்ந்துபோன சில அப்பங்களும் புளிச்சாதமும் அச்சாதத்திற்கு உபயோகமாகும் சில ஊறுகாய் தினுசுகளும் காணப்பட்டன. அவற்றில் சிலவற்றைப் புசித்துப்பசியாறிக் களைதீர்ந்த பின்னர் தாகத்திற்கு ஏதாவது சலமல்லது பாலாவது வேண்டுமென யோசிக்கையில் இளையோன் சொல்லியது என்னவெனில் "நாமிந்த அழகுமாளிகையின் கதவைத் தட்டிப்பார்ப்போம் யாராவது அக்கதவைத்திறப்பாராயின் தாகத்திற்கு ஜலமும் இந்தநிசிப்போது தங்குவதற்கிடமும் கேட்டுப்பார்ப்போம். அப்படிக்கொடாராயின் நமது குதிரைகளை அவிழ்த்துக்கொண்டு மறுபடியும் பயணப்படவேண்டியதே. நாமினிப் பேசும்போதாவது பிறருக்குத் தெரிவிக்குங்காலத்திலாவது நமது நாமதேயங்கள் ஞானசிகாமணியென்றும் விவேகசிந்தாமணி என்றும் சொல்லுவோம். இருவரும் சகோதரர்களென்றும் பொருள்விஷயமாக வெளிதேச சஞ்சாரஞ்செய்யப் புறப்பட்டவர்களென்றும் உலகத்தார்க்கு வெளிப்படுத்தவேண்டியது. மேலும் நாம்கொண்ட எண்ணங்கள் முடிவாகிறவரைக்கும் நமது பிறப்பு வளர்ப்பு முதலிய எந்த சங்கதிகளையும் வெளிப்படுத்தாமல் அதிகசாக்கிரதையாய் இருக்கவேண்டியது." இவ்விதமாக இருவரும் சம்பாஷித்துக்கொண்டே அச்சிங்காரமாளிகை வெளிப்புறத்தின்கண்ணுள்ளகதவை மூன்றுதரம் தட்டினார்கள். உடனே நித்திரை செய்துகொண்டிருந்த மாதவன் என்னும் வேலையாள் ஒருவன் தூங்கினகண்ணோடுவந்து கதவை மெல்லத்திறந்து யாரங்கே என்று வினவ,

அதற்கு "மூத்தோன் நாங்களிருவரும் பாட்டைசாரிகள் தாகமிகுதியினால் நாவறண்டு உலர்ந்தபடியால் அருந்துவதற்கு சுத்தஜலமும் பனியின்மிகுதியைப்பற்றிப் போவதற்குச் சாத்தியமில்லாமல் இருப்பதால் தங்க இடமும் கொடுப்பாயானால் உங்களுக்கு நாங்கள் மிகுந்த நன்றியுள்ளவர்களா யிருப்போம். நானும் என்தம்பியாகிய விவேக சிந்தாமணியும் ஆகிய இருவருமே வந்திருக்கின்றோம்" என்றுசொல்ல அதைக்கேட்ட மாதவன் "நீங்கள் சொல்வதுசரியே இந்த இராக்காலத்தில் மலைபடிவாரத்தில் அமர்ந்திருக்கும் இம்மாளிகையினருகில் வருபவர்களை யோக்கியர்களென்று நம்புவதெப்படி? திருடர்களென்று யூகி

க்கவேண்டியதேயல்லது வேறெந்தமனிதர்களென்று நினைக்கக்கூடும்? ஆயினும் இதோ விளக்கு ஏற்றுகின்றேன். உருவங்களைக்கண்டால் திருடர்களென்றும் யோக்கியர்களென்றும் தெரிந்துகொள்ள முடியும்" என்று உள்ளேசென்று விளக்குக்கொளுத்தி முகங்களைக் கண்ணுற்றவுடன் அம்முகங்களின் காந்தியையும் யாவரையுமயக்குவிக்கும் கண்களின் நோக்கையும் அன்னங்களும் நாணும்படிநடக்கும் ஒய்யாரநடைகளையுங் கண்டஉடன் அவர்களை விநயத்தோடு உள்ளே அழைத்துக் கொண்டுசென்றான்.

உடனே வேலையாள் அவர்களைநோக்கி "உங்களைப் பார்த்தால் 18 அல்லது 20 வயது இருக்கும்போற் றோன்றுகிறதே. இச்சாமத்தில் இம்மார்க்கமாகச் சாதாரணமாய் வருகிறவர்களில்லையே அப்படியிருக்க உங்களிருவரையும் காணும்படி நேரிட்டது ஆச்சிரியத்தை யுண்டுபண்ணுகின்றது" என்று சொல்லிக்கொண்டு இரண்டு அறைகளைதிறந்து தனித்தனிப்படுக்கை ஏற்பாட்டுகளைச்செய்ததுடன் குளிரவைத்துச் சாம்பிராணிப் புகையூட்டிய சலத்தை இரண்டு கூஜாக்களில் நிரப்பி யொவ்வொரு அறையிலும் கொண்டுபோய் மாதவன் என்னும் வேலையாள் வைத்துவிட்டு நித்திரைசெய்யப் போய்விட்டான். இரண்டுசிறு வீரர்களும் தங்களுக்கேற்படுத்திய அறைகளில் துயில்செய்யச் சென்றார்கள்.

CHAPTER II.

வெண்பா. இராகம் - சங்கராபரணம்.

தமிழின் பெருமை தனையறியும் வேந்தர்
தமிழை மிகப்புகழ்ந்தே தாழும்—தமிழினது
நுட்பங்கள் கற்றுணர்ந்து நூதனப் பாடலையே
இட்டமுடன் கேட்பாரிசைந்து.

முதற்கூறிய தருமவிஹார மென்னும் தேசத்திற்கு சுமார் 43 மைல் தென்மேற்கு மூலையில் கல்யாணபுரி யென்றொரு நகரமுண்டு. அந்நகரத்தை யாளும் இராஜாதிராஜனுகிய பத்மசீலனென்பவன் தனது அருமை மந்திரியாகிய மதியூகி என்பவனோடுகூடி மனுநீதி தவறாமல் அரசாண்டுவருங் காலத்தில் பகவானது அனுக்கிரகத்தினால் அந்த அரசனுக்கு இரண்டுபுத்திரிக ளுதித்தார்கள். அப்புத்திரிகளை நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்து ஐந்துவயதுக்குமேல் ஆனையேற்றம் குதிரையேற்றம் கல்விப்பயிற்சி முதலிய வித்தைகளையும் பயிற்றுவித்து அதிகபிரேமையோடு வளர்த்துவந்தான். இக்கதையாரம்பத்தில் அவர்கள் பருவமடைந்து கல்லியாணத்துக்குத் தக்கவர்க

ளாயிருந்தார்கள். மேற்கூறிய மெஞ்ஞானபுரத்தின் மலையடியில் ஏற்படுத்திய மாளிகைக்கு சிறுவர்களிருவரும் வந்ததினத்தினிரவில் பத்மசீலனும் அவனுடைய பட்டஸ்திரீயாகிய ஆனந்தவல்லியென்னும் அரசியும் ஒருங்குகூடி தங்களுக்குள் பேசிக்கொண்டதாவது: "நமது பெண்சிகாமணிகளிருவரும் தக்கவயததைந்தும் மணம்புரியத்தக்க புருஷர்களில்லையே இனிமேலாவது தாமசஞ்செய்யாமல் வந்திருக்கும் ஜாதகங்களைப் பரிசோதனைசெய்து ஏதாவதுமுடிவுசெய்தால் உத்தமமாயிருக்கும். புருஷரோடுகூடி வாழுங்காலத்தில் பெண்களை மணம்புரிவிக்காமல் காலத்தை வீணேபோக்குவது உசிதமாகத் தோற்றவில்லை" யென்று ஆநந்தவல்லியென்னு மரசியானவள்முறையிட,

அதைக்கேட்ட அரசன் "நம்மிடத்தி லனுப்பியிருக்கும் ஜாதகங்களைப் பரிசோதித்ததில் மெய்ஞ்ஞான புரத்தின் அரசனாகிய கருடத்துவஜ மகாராஜாவின் புத்திரர்களாகிய புண்ணியசீலன், புண்டரீகாக்ஷன் என்னுமிருவர்களே தகுந்தமணவாளர்களாயிருக்கக்கூடுமென்று தெரியவருகிறது. அதில் மூத்தோன் சர்வகலாசாலையில் கல்வியிற்றேறி பீ. யே. பட்டம் பெற்ற சிறுவன்; இளைஞனே அதிக யுத்தவீரன், சண்டையில் அஞ்சாத நெஞ்சுபடைத்தவன், சபையினில் சற்றும் கலங்காது ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் சந்தோஷிக்கத் தகுந்த தொனியுடையவன். அவ்விருவருமே தவிர வேறொருவர் நமது புத்திரிகளுக்குத் தகுந்த புருஷராகார்கள்" என்றுபதில் சொன்னவுடன் அரசிமனமகிழ்ந்து உடல் பூரித்து "என்னுடைய மனமும் அந்த இடத்திற்றான் சென்றிருக்கிறது நமது புத்திரிகளின் மனமும் அவ்வாறே. நான் முன்னமே பரிசோதித்திருக்கிறேன்" என்று விடையளித்தாள்.

இப்படி யிருவரும் சம்பாஷித்துக் கொண்டே யிருக்கையில் அவ்விராஜனுடைய மந்திரியாகிய மதியூகியும் சமஸ்தான வித்வானாகிய முத்தமிழ்வல்ல சாம்பசிவக் கவிஞனென்று பெயர் படைத்த யொரு முதியோனும் தாங்கள் வருகின்ற சங்கதியை வேவுகாரர்களால் தெரிவித்து அரசனுணையைக் கைக்கொண்டு உள்ளே அரண்மனைவாயலில் வந்துபணிந்து ஆசனங்களளிக்க அவ்வாசனங்களின்மீது அமர்ந்திருந்தார்கள். பின்பு அவ்வேந்தன் மந்திரியை நோக்கி "ஏ! பிரதானி நானும் என்மனையாளும் எமது புத்திரிகளின் விவாக விஷயங்களைப் பற்றி ஆலோசனை செய்துகொண்டிருந்தோம் அச்சமயத்தில் நீங்களும் வந்தீர்கள். எங்களுடைய யோசனை யின்னதென்று உங்களுக்குத் தெரிந்த விஷயமே, ஆயினும் உங்களை யொன்றுகேட்பேன் அதைக்கள்ளங்கபடமில்லாமல் தெரிவிக்கவேண்டு" மென அதற்கிருவருமிசைந்து "எம்மாற்கூடியவரையில் எமது புத்திநுட்பத்திற்கேற்க ஆலோசனைசொல்லுகின்றோ" மென்னவே இவ்விருவரையும் தனித்தனியாக

அழைத்து "எம்மகளிருவருக்கும் இசைந்த மணவாளர்யார்" என்று வினவ உடனே "கருடத்துவஜ மகாராஜாவின் புத்திரர்களே யொழிய வேறொருவரும் ஈடல்லர்" என்று சொல்லிவைத்தாற்போல மாறுத்தரந் தந்தார்கள். அம்மொழியைக்கேட்ட அரசனும் அரசியும் களிகூர்ந்து ஆநந்தசாகரத்திலழுந்தினார்கள். உடனே அரசன் "நாங்களிப்போது சந்தோஷமென்னும் கடலில் ஆழ்ந்து மறுபடியும் மிதந்து வருகின்றோம். இச்சமயத்திற் கேற்கச் சில பேரின்பப்பாடல்களை யும இடத்தில்கேட்க மனமிசைந்தோம் எங்கள் எண்ணத்தைநிறைவேற்றுவீரோ" என்று புலவரை நோக்கினார்.

(இன்னும்வரும்.)

பி. ஷண்முகசுந்தரம் பிள்ளை, பி. ஏ.

விடுகதைகள்.

1. அவளோபர்வதம், அவள் இலைகளோ சிறுமணி, அவள் பெற்ற பிள்ளைகளோ கோணக்கோண.

2. அடிபெருத்தேன் மத்தளமானேன், நுனிசிறுத்தேன் சாரைப்பாம்பானேன், தலைவிரித்தேன் பம்பையானேன், முத்துக்கோத்தேன் செட்டியானேன், கொடமெடுத்தேன் கோனானானேன்.

3. சின்னக்குட்டி தொடுத்தமாலை சிடுக்கில்லாமலெடுத்தவர்க்கு எட்டுக்கட்டுவெற்றிலையும் எண்ணூயிரம் கொட்டைப்பாக்கும் இனாம்.

கணக்கு.

1. ஒருதடாகத்தில் சிலதாமரைகளிருந்தன. அங்கு சிலகிளிகள்வந்து ஒவ்வொருதாமரைக்கு ஒருகிளியாக உட்காரவே, ஒருகிளிக்கு உட்கார இடமில்லாமற்போயிற்று. தாமரைஒன்றுக்கு இரண்டு கிளிகளாக உட்கார ஒருதாமரை மீந்துபோயிற்று. ஆகையால் கிளிகளையும் தாமரைகளையும் கணக்கிடுக.

2. இரண்டுபேர் ஒருகிராமத்திற்குப்போய் எட்டுப்படி நெய்வாங்கி வந்தார்கள். வரும்வழியில் இருவருக்கும் மனஸ்தாபமுண்டாகி வாங்கிவந்தநெய்யை தலைக்கு நான்குபடியாக பிரித்துக்கொண்டார்கள். அவர்களிடத்திலிருந்த பாத்திரங்கள் மூன்றுதானிருந்தன. அவை 3-படி பாத்திரம் ஒன்று, 5-படி பாத்திரம் ஒன்று, 8-படி பாத்திரம் ஒன்று. அவர்கள் நெய்யை எவ்விதமாய் பிரித்துக்கொண்டார்கள்?

சீதாலக்ஷ்மிஅம்மாள்.

☞ இவைகளுக்கு விடைகளை பெண்மணிகளில் எவராவது அனுப்பினால் அடுத்த சஞ்சிகையில் அவைகள் பிரசுரிக்கப்படும். [ப—ர்]

பாக சாஸ்திரம்.

பால்போளி செய்யும் விதம்.

கோதுமைமாவு அரைப்படி, நெய் பலம் 1. இதுகளைச் சேர்த்து கொஞ்சம் ஜலம் தெளித்து கெட்டியாய்ப் பிசைந்து வைத்துக்கொள்ளவேண்டும். பிசைந்த மாவை எலுமிச்சம் பழத்தளவு உருண்டைகளாகச்செய்து அப்பளம் செய்வதுபோல் ஒரு பலகையில் கொஞ்சம் அரிசிமாவைத்தூவி ஒவ்வொரு உருண்டையையும் வைத்து அப்பளக் குழவியால் சக்கரம்போல் செய்துகொள்ளவேண்டியது. 10 - பலம் நெய்யை அகலமான பாத்திரத்தில்விட்டு அடுப்பில் வைத்துக்காய்ச்சி அதில் மேற்சொன்ன அப்பளத்தைப் பொரித்துக்கொள்ள வேண்டும். பின்பு ஒருபடி பாலை சிவக்கக் காய்ச்சினவுடனே கசகசா பலம் ஒன்றை பக்குவமாக வறுத்துக்கொண்டு வெண்ணெய்போல் அரைத்து பாலுடன் சேர்த்து, பிறகு 10 பலம் சீனி சர்க்கரையையும் பாலுடன் சேர்த்து கலக்கி வைத்துக்கொள்ள வேண்டும. அரைப்பலம் ஏலரசியைத் தூள்செய்து இதில் கலக்க வேண்டும். நெய்யில் பொரித்த அப்பளங்களை இதில் பக்குவமாகப்போட்டு கால்மணி நேரம் வரையிலும் ஊறவைக்கவேண்டும். பின்பு இவைகளைப் புசிக்கலாம்.

* எண்ணெய் மாங்காய் ஊறுகாய்.

25 மாங்காய்களைச் சுத்தம் செய்துகொண்டு ஒவ்வொன்றையும் எட்டு துண்டுகளாகச் செய்து வைத்துக்கொள்ளவேண்டும். மிளகாய் 8 பலம் வெந்தியம் 3 பலம், மஞ்சள் அரைப்பலம் இதுகளில் கொஞ்சம் நல்லெண்ணெய் சேர்த்து இவைகளை நன்றாய் வறுத்து பொடிசெய்துகொள்ளவேண்டும். நல்லெண்ணெய் 8 பலத்தில் அரைப்பலம் பெருங்காயத்தைப் போட்டு அடுப்பில் நன்றாய்க் காய்ச்சி பின்பு வறுபட்ட பெருங்காயத்தைப் பொடிசெய்து மேற்சொல்லிய மிளகாய்ப் பொடியுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும். காய்ச்சின எண்ணெயில் பொடியைக்கலந்து பின்பு ஒவ்வொருமாங்காயிலும் அப்பொடியை நன்றாயமுக்கி ஒரு பானையிலாவது அல்லது கற்சட்டியிலாவது வைத்துக்கொள்ளவேண்டும்.

* மரத்திலிருந்து பரித்த மாங்காய்களாயிருக்கவேண்டும். கீழ் விழுந்த மாங்காய்கள் இந்த ஊறுகாய்க்குத் தகுந்ததல்ல,